பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
19 10 2024 6 45
சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- கர்மயோகி இயக்கத்தின் சார்பில் நடைபெறும் தேசிய கற்றல் வாரத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.
- விரைவான பொருளாதார வளர்ச்சியைக் கண்டு வரும் நாடாக இந்தியா திகழ்கிறது என்று மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.
- தமிழக ஆளுநருக்கு எதிரான குற்றசாட்டுகள் அரசியலமைப்பு பதவியின் கண்ணியத்தை குறைக்கும் செயல் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.
- திருவண்ணாமலையில் கார்த்திகை தீப திருவிழாவை முன்னிட்டு முன்னேற்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
- ப்ரோ கபடி லீக் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் தெலுகு அணி – தமிழக அணியையும், புனே அணி – ஹரியானா அணியையும் எதிர்கொள்கின்றன.

<u>*---- இனி விரிவான செய்திகள்---*</u>

<<<<>>>>

கர்மயோகி என்ற தேசிய கற்றல் வாரத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.

மக்களை மையமாகக் கொண்ட நிர்வாகத்தை ஊக்குவிக்கும் வகையில் கடந்த 2020ஆம் ஆண்டு கர்மயோகி இயக்கம் தொடங்கப்பட்டது.

டிஜிட்டல் முறையில் வடிவமைக்கப்பட்ட இந்த கற்றல் முறையில் குடிமைப்பணி அதிகாரிகளுக்கு திறன் மேம்பாடு மற்றும் மனிதவள மேலாண்மை குறித்த பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.

தேசிய கற்றல் வாரத்தில் தனிநபர் மற்றும் அமைப்புகளின் திறன் மேம்பாட்டை ஊக்குவிப்பதற்கான பயிற்சிகள் வழங்கப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

விரைவான பொருளாதார வளர்ச்சியைக் கண்டு வரும் நாடாக இந்தியா திகழ்கிறது என்று மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், நாட்டின் பொருளாதார சூழல் உலக நாடுகளுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளதாக குறிப்பிட்டார்.

நாட்டின் அன்னிய செலாவணி கையிருப்பு 700 பில்லியன் அமெரிக்க டாலர்களாக உள்ளது என்று அவர் கூறினார்.

பருவநிலை மாற்றம் போன்ற இயற்கைப் பேரிடர்களை சமாளிக்கத் தேவையான தீர்வுகளைக் காண்பதில் உலக வங்கி பிற நாடுகளுடன் இணைந்து பணியாற்ற வேண்டும் என்று திரு. பியூஷ் கோயல் வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

தமிழக ஆளுநருக்கு எதிரான குற்றசாட்டுகள் அரசியலமைப்பு பதவியின் கண்ணியத்தை குறைக்கும் செயல் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

சென்னையில் தூர்தர்ஷன் தொலைக்காட்சி நிலையத்தில் நடைபெற்ற விழா குறித்து திமுக உள்ளிட்ட அரசியல் கட்சிகள் கூறியுள்ள விமர்சனங்களுக்கு அறிக்கை மூலம் பதிலளித்துள்ள அவர், இதனைத் தெரிவித்துள்ளார்.

தூர்தர்ஷன் தொலைக்காட்சிக்கு டிடி தமிழ் என்று பெயர் மாற்றம் செய்து மத்திய அரசு, தமிழுக்கு புகழ் சேர்த்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மத்தியில் ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சிக் காலத்தில் அனைத்து துறைகளிலும் ஹிந்தி விழா நடத்தப்பட்டுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உலகின் மிக தொண்மையான மொழியான தமிழ் மொழி குறித்து பல்வேறு நாடுகளில் பிரதமர் பெருமையுடன் பேசி வருவதாக அவர் கூறினார்.

பல்வேறு வெளிநாட்டு பல்கலைக்கழகங்களிலும் தமிழ் இருக்கைகள் அமைப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டதை அவர் சுட்டிக்காட்டினார்.

மக்களை திசைதிருப்புவதன் மூலம் எதிர்க்கட்சிகள் அரசியல் செய்து வருவதாக திரு. எல். முருகன் குறை கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தில் பல ஆண்டுகளாக இருமொழிக் கொள்கை கடைபிடிக்கப்பட்டு வருவதாக காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு. ப. சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலத்தில் உள்ள தனியார் மற்றும் மத்திய அரசு பள்ளிகளில் ஹிந்தி கற்றுத்தரப்படுவதாகவும், ஹிந்தி தேர்வுகளை பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் ஆண்டுதோறும் படித்து தேர்ச்சி பெற்று வருவதாகவும் கூறினார்.

ஹிந்தியை விரும்பிப் படிக்கும் மாணவர்களுக்கு எவ்விதத் தடையும் இல்லை என்றும், மக்களின் எண்ணங்களை மாநில அரசு பிரதிபலிப்பதாக திரு. சிதம்பரம் கூறினார்.

<<<<>>>>

நிலக்கரித்துறையில் மத்திய அரசு மேற்கொண்டு வரும் சீர்திருத்த நடவடிக்கைகள் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இது தொடர்பாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், அதிக எண்ணிக்கையிலான விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளது இத்துறையின் வளர்ச்சியை எடுத்துக்காட்டுவதாக உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலக்கரி சுரங்க ஏலத்தில் விண்ணப்பிப்பதற்கான கடைசி தேதி நேற்றுடன் முடிவடைந்த நிலையில், மொத்தம் 44 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

திருவண்ணாமலையில் வரும் டிசம்பர் மாதம் நடைபெற உள்ள கார்த்திகை தீப திருவிழாவை முன்னிட்டு பக்தர்களின் வசதிக்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பல்வேறு துறைகள் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் கலந்துகொண்ட பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தீப திருவிழாவின் முக்கிய நிகழ்வான பரணி தீபம் மற்றும் மகாதீபத்தன்று சுமார் 50 லட்சம் பக்தர்கள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுவதாகக் கூறினார்.

இதனையொட்டி பக்தர்களின் நலனைக் கருத்தில்கொண்டு குடிநீர் வசதி, நடைபாதை, வடிகால், முதலுதவி மையங்கள் மற்றும் சுகாதார வசதிகளை மேம்படுத்துவது உள்ளிட்ட பணிகள் 30 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

கிரிவலப் பாதையில் வழங்கப்படும் உணவின் தரத்தைக் கண்காணிக்க அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை சார்பில் குழு அமைக்கப்பட்டு தீபத் திருநாளின்போது மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்த மக்களின் கருத்துகளை பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<>>>

தமிழகத்தில் தொழில்துறையின் வளர்ச்சிக்காக மாநில அரசு மேற்கொண்டு வரும் சீரிய நடவடிக்கைகள் காரணமாக கடந்த 3 ஆண்டுகளில் 31 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாக மாநில வர்த்தகத்துறை அமைச்சர் திரு. டி.ஆர்.பி. ராஜா தெரிவித்துள்ளார்.

திருவாரூர் மாவட்டத்தில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்திற்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், முன்னெப்போதும் இல்லாத வகையில் புதிய முதலீடுகள் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக கூறினார்.

இரண்டாவது கட்ட டைடல் பார்க் அமைக்கும் பணிகள் விரைவில் மேற்கொள்ளப்பட உள்ளதாக அவர் தெரிவித்தார்.

விவசாயிகளின் சொர்க்க பூமியாக திகழும் தஞ்சாவூரில் வேளாண் சார்ந்த தொழிற்பேட்டையைக் கொண்டு வருவதன் மூலம் விவசாயிகளின் வருவாயை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சர் கூறினார்.

<<<>>>

மத்திய கிழக்கு மற்றும் அதனை ஒட்டிய லட்சத்தீவு பகுதிகளில் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக அடுத்த 6 நாட்களுக்கு தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே வங்கக் கடலில் நாளைமறுநாள் குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இது வரும் வியாழக்கிழமை காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடையக் கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

குமரிக்கடல், அந்தமான் கடல் பகுதிகள், மத்திய மற்றும் அதனை ஒட்டிய தெற்கு வங்கக் கடல் பகுதிகளில் சூறாவளிக் காற்று 35 கிலோ மீட்டர் முதல் 45 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும் என்பதால் இப்பகுதியில் மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

இந்தியா – சவுதி அரேபியா நாடுகளிடையே அரசியல், பாதுகாப்பு, கலாச்சாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இணைந்து செயலாற்றுவது குறித்த பேச்சுவார்த்தை புதுதில்லியில் நடைபெற்றது.

<<<<>>>>

இந்தியா, இலங்கை இடையேயான வர்த்தகத்திற்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ளதாக அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் திரு. **Vijitha Herath** தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

லெபனானில் போர்நிறுத்தத்தை கொண்டுவருவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளதாக அமெரிக்க அதிபர் திரு. ஜோ பைடன் கூறியுள்ளார்.

<<<<>>>>

நாட்டின் விமானப் போக்குவரத்தின் சிறப்பை எடுத்துக்காட்டும் வகையில் அமைக்கப்பட்டுள்ள பூங்காவை அத்துறைக்கான அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு புதுதில்லியில் நேற்று திறந்து வைத்தார்.

<<<<>>>>

புதுதில்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் நேற்றுடன் நிறைவடைந்த இந்திய மொபைல் மாநாட்டில் 190க்கும் அதிகமான நாடுகள் பங்கேற்றன.

<<<<>>>>

உத்தரப்பிரதேசத்தில் நேரிட்ட சாலை விபத்தில் 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

<<<<>>>>

தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் 14வது பட்டமளிப்பு விழா ஆளுநர் திரு. ஆர்.என். ரவி தலைமையில் இன்று நடைபெறுகிறது.

<<<<>>>>

திருப்பத்தூர் மாவட்ட காவல்துறை சார்பில் கல்லூரி மாணவிகளுக்கு சைபர் குற்றங்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

<<<<>>>>

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூரில் அடுத்த மாதம் 2ஆம் தேதி தொடங்க உள்ள கந்தசஷ்டி விழாவையொட்டி முன்னேற்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருவதாக ஆட்சியர் திரு. கே. இளம்பகவர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தீபாவளிப் பண்டிகையை ஒட்டி பாதுகாப்பு பணிகளை மேற்கொள்ள ஏதுவாக திருச்சியில் தற்காலிக புறக் காவல் நிலையத்தை அம்மாநகர காவல் ஆணையர் திருமதி காமினி நேற்று திறந்து வைத்தார்.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ப்ரோ கபடி லீக் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் தெலுகு அணி – தமிழக அணியையும், புனே அணி – ஹரியானா அணியையும் எதிர்கொள்கின்றன.

நேற்று நடைபெற்ற ஆட்டங்களில் தெலுகு அணி – பெங்களுரு அணியையும், தில்லி அணி – மும்பை அணியையும் வென்றன.

<<<<>>>>

ஐ.எஸ்.எல். கால்பந்துப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் கோவா அணி - மும்பை அணியை எதிர்கொள்கிறது.

கோவையில் நடைபெறும் இப்போட்டி மாலை 5 மணிக்கு தொடங்குகிறது.

மற்றொரு போட்டியில் ஈஸ்ட் பெங்கால் அணி – மோகன் பஹன் அணியை எதிர்கொள்கிறது.

கொல்கத்தாவில் நடைபெறும் இப்போட்டி இன்றிரவு ஏழரை மணிக்கு தொடங்குகிறது.

<<<<>>>>

கனடாவில் நடைபெற்று வரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் **Veer Chotrani** மெக்சிகோவின் **Leonel Cordenas**-ஐ எதிர்கொள்கிறார்.

<<<<>>>>

தில்லியில் நடைபெற்று வரும் ரஞ்சிக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் தில்லி அணிக்கு எதிரான ஆட்டத்தில் முதலில் பேட் செய்து வரும் தமிழக அணி முதல் இன்னிங்சில் ஒரு விக்கெட் இழப்புக்கு 379 ரன் எடுத்துள்ளது.

தமிழகத்தைச் சேர்ந்த சாய் சுதர்ஷன் 202 ரன்களுடனும், வாஷிங்டன் சுந்தர் 96 ரன்களுடனும் களத்தில் உள்ளனர்.

<<<<>>>>